10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 206 சனிக்கிழமை டிசெம்பர் 16 2017 ethirolimedia@gm / 021 300 48 48



## பிரபாகரனால் மூடப்பட்ட வளாகம் மீண்டும் திறப்பு

வவுனியா , டிசெ.16

"தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தைக் கொண்டாடியதால், தமிழ்-சிங்கள மாணவர்களுக்கிடையிலான முரண்பாட்டால் மூடப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகக் கல்வி நடவடிக்கைகள் 06▶



# குற்றவாளிகளே சிறையில்:
# அரசியல் கைதிகள் இல்லை!

யாழ்ப்பாணம், டிசெ.16

"நீதியமைச்சின் தகவலின் படி இலங்கைச் சிறைகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை. அவர்கள் அனைவரும் குற்றமிழைத்தவர்களே. குற்றவாளிகளே இப்போது தடுத்து வைக்கப்படுள்ளார்கள். அவர்கள் தொடர்பான நடவடிக்கையானது நீதியின் ஊடாகவே முன்னெடுக்கப்பட முடியும்" என அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில், சிறிலங்கா சுதந்திர கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக நேற்றைய தினம் யாழ்.வந்த போதே, அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

"இறுதிப் போர் முடிந்தபோது, 12 ஆயிரம் 06▶

## டிசெம்பர் 28 இல் கேப்பாபிலவில்
## 132 ஏக்கர் காணி கையளிப்பு

முல்லைத்தீவு, டிசெ.16

முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் நிலமீட்பு போராட்டத்துக்குப் பணிந்து, அந்த மக்களின் 132 ஏக்கர் பரப்பளவான ஒரு தொகுதிக் காணிகளை, டிசெம்பர் 28 ஆம் திகதி கையளிக்கவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. இந்தத் தகவலை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் வெளியிட்டுள்ளார்.

138 குடும்பங்களுக்கு 06▶



## வீதியில் மாரடைப்பு சாரதி உயிரிழப்பு

வவுனியா , டிசெ.16

வீதியில் கனரக வாகனத்தைச் செலுத்திச் சென்ற போது, திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால் சாரதி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

வவுனியா ஏ- 9 வீதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி இரும்பகம் ஒன்றுக்கு பொருட்களை ஏற்றிச்சென்ற கனரக வாகனத்தின் சாரதிக்கே இவ்வாறு திடீரென 06▶



## 16 உள்ளூராட்சிகளுக்கு தமிழரசு கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்றுச் செலுத்தியது.

சாவகச்சேரி நகரசபைக்கான 06▶

## வீட்டுக்குள் குழப்பம் நேற்றுடன் தீர்ந்ததாம்

மன்னார், டிசெ.16

உள்ளூராட்சி மன்றப் பங்கீடு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டு வந்த எமது குடும்பப் பிரச்சினை தீர்ந்து விட்டதாக தமிழ்த் தேசியக் 06▶

## தொடங்கியது தர்ம யுத்தம்

மன்னார், டிசெ.16

"தமிழ்த் தேசிய அரசியலை கொழும்பிலே அடகு வைத்து, ஆதாயச் சூதாடிகளாகி விட்ட இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலுக்கு முடிவு கட்ட, தர்ம யுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்"



என்று ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் வி.எஸ். 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

எதிரொலி Ethiroli
சனி 16 டிசெம்பர் 2017

# மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு




வவுனியா காத்தார் சின்னக்குளம் அ.த.க பாடசாலையில் கடந்த 7 ஆம் திகதி பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதன்போது லண்டனில் வசிக்கும் கிருஷ்ணானந்தன் என்பவர், மாணவனான நந்தகுமார் யானுசனுக்கு துவிச்சக்கரவண்டி ஒன்றை அன்பளிப்புச் செய்தார். (அ)

## பரீட்சை மோசடி மாணவர்கள் கைது



கொழும்பு,டிசெ.16

பரீட்சை மோசடியில் ஈடுபட்ட இரண்டு மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

லுணுகல மஹா வித்தியாலத்தின் சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய இரண்டு மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். மோசடியான முறையில் பரீட்சைச் சுட்டெண்களை மாற்றிக் கொண்டு பரீட்சையில் தோற்றியதாகவே இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

# இதுவும் குற்றமே!

கொழும்பு,டிசெ.16

மனைவியின் விருப்பமின்றிப் பாலுறவு கொள்வதும் குற்றவியல் சட்டத்தினடிப்படையில் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றச்செயல் என்ற அடிப்படையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகவும், குற்றவியல் சட்டத்தில் விரைவில் இது தொடர்பிலான சட்டத் திருத்தங்கள் முன்மொழியப்படவுள்ளதாக நீதி அமைச்சர் தலதா அத்துகோரள நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

“திருமணம் பாலியல் வன்கொடுகைகளை மேற்கொள்வதற்கான ஓர் அங்கீகாரமாகக் கருதப்பட முடியாது. மனைவியர் மீதான பாலியல் துன்புறுத்தல்களும் வீட்டு வன்முறைகளாகவே கருதப்பட வேண்டும். மனைவியுடன் உறவு கொள்வது கணவனின் உரிமையாகவே கருதப்பட்டு வருகின்றதெனினும் தற்போது இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு அவை குற்றச் செயலாகவே கருதப்படுகின்றது.



பாலியல் வன்கொடுமைக்குள்ளாகும் மனைவி, கணவருக்கெதிராகச் சட்ட நடவடிக்கையெடுக்கக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படும். வீட்டு வன்முறைக்குள்ளாகும் மனைவியர் கணவருக்கு எதிராகக் மத,கலாசார காரணங்களால் இலங்கையில் முறைப்பாடு செய்வதில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி வரிச் சலுகை தொடர்பான நிபந்தனைகளில் திருமணப் பாலியல் வன்கொடுமைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு அடுத்த ஆண்டு நடுப்பகுதியளவில் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படும்” எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (அ)



## தடியால் தாக்குண்டு குடும்பஸ்தர் சாவு

நுவரெலியா,டிசெ.16

நுவரெலியாவில் தடியால் தாக்கப்பட்ட ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அக்கரப்பத்தனை ஊட்டுவள்ளித் தோட்டம் உட்லெக் பிரிவில் குடும்பத்திலேற்பட்ட தகராறு கைகலப்பாக மாறியதில் சந்தேக நபர்களான இருவர் குறித்த நபரைத் தடியால் தாக்கியமையால், தாக்குதலுக்கிலக்கான நபர் கடுங்காயங்களுடன் அக்கரப்பத்தனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே மரணமடைந்தார்.

குறித்த தோட்டத்தில் வசிக்கும் 32 வயதுடைய ராமையா பெரியசாமி என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பலியாகியுள்ளார். மேலும் சம்பவத்தை நேரில் கண்ட உயிரிழந்தவரின் மகனொருவர் தனது அப்பாவை அடித்ததாகப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

# செந்திலைச் சந்தித்த சத்தியலிங்கம்

வவுனியா,டிசெ.16

வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கத்தை ஊவா மாகாண சபையின் அமைச்சர் செந்தில் தொண்டமானை மா.ச.உறுப்பினரின் வவுனியா இல்லத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சந்தித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவரை அண்மையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதன் தொடர்ச்சியாகவே குறித்த சந்திப்பு நடைபெற்றது. அதாவது வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் மலையக மக்களின் பிரதிநிதிகளுக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பிலான கலந்துரையாடலே நடைபெற்றது.

இதற்குப் பதிலளித்த மா.ச உறுப்பினர்“மலையகத் தமிழர் என்ற வர்க்க வேறுபாடுகளின்றி வடக்கில் வாழும்



தமிழர்கள் என்ற ரீதியிலேயே அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வதாகவும், தமிழர்களுக்கான இனவிடுதலை, உரிமைப் போராட்டத்தில் மலையகத் தமிழ் மக்களின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடமுடியாது” எனவும் தெரிவித்தார். (அ)


## புதுப் பொலிவுடன் கடவுச் சீட்டு

கொழும்பு,டிசெ.16

இலங்கையில் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டை அதிநவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பியகம சுதந்திர வர்த்தக மையத்தில் அமைந்துள்ள தோமஸ்ஸ் டி லாரூ நிறுவனத்தில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும்போது பிரதமர் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அடுத்த வருடம் முதல் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு, புதிய பாதுகாப்பு முறையின் கீழ் அச்சிடப்படவுள்ளது. புதிய கடவுச்சீட்டுக்காக மைக்ரோ சிப் ஒன்றும் உள்ளடக்கப்படவுள்ளதாகவும்,இவற்றைப் பியகமவில் அமைந்துள்ள தோமஸ்ஸ் டி லாரூ நிறுவனத்தில் அச்சிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.(அ)

# பல்கலைக் கல்வித் தரம் உயர்த்தப்பட வேண்டும்



கொழும்பு,டிசெ.16

பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தை உயர்த்துமாறும், பல்கலைக்கழகங்களில் பகிடிவதை செய்வதனைத் தடுக்க நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமெனவும் அலரி மாளிகையில் துணைவேந்தர்களுடன் நடத்திய சந்திப்பொன்றின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

“பல்கலைக்கழகங்களின் கட்டடங்களை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமையளிக்காது, உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குச் சர்வதேச அளவில் காணப்பட்ட நன்மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. மீளவும் நற்பெயரைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது துணைவேந்தர்களின் கடமையாகும். பல்கலைக்கழகங்களில் பகிடிவதை செய்வதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” எனப் பிரதமர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
சனி, 16 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

# இது ஒரு பதச் சோறுதான்

பங்காளிக் கட்சிகளுடனான பிடுங்குப்பாடு முடிந்து, இப்போது உட்கட்சிப் பூசல்கள் உக்கிரமடையத் தொடங்கிவிட்டன. சாவகச்சேரி நகர சபைக்கான தேர்தலில் போட்டியிடக் கட்டியணைத்தபடி கட்டுப்பணம் செலுத்தச் சென்றவர்கள், வேட்பு மனுத் தாக்கலின் போது கட்டிப் புரண்டு சண்டையிட்டுள்ளனர். ஏற்கனவே சாவகச்சேரியின் தலைமைக்கான போட்டி மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனுக்கும், முன்னாள் அதிபர் அருந்தவபாலனுக்கும் இடையில் தொடங்கியிருந்தது. கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனின் வலது கை என்று வர்ணிக்கப்படும் மாகாணசபை உறுப்பினர் சயந்தனின் செல்வாக்கை தென்மராட்சியில் வளர்க்கவே தமிழரசுக் கட்சி ஆர்வம் காட்டி வந்தது. இந்த நிலையிலேயே, கடந்த முறை நடைபெற்ற தென்மராட்சிப் பிரதேசத்துக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சுமந்திரனும், அருந்தவபாலனும் பகிரங்கமாக மோதிக் கொண்டனர். அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவராக இருந்த சுமந்திரன் “எச்சரிக்கிறேன்” என்று மிகக் கடுமையாக, அருந்தவபாலனின் வாதத்தை அடக்க முற்பட்டிருந்தார். அதன் பின்னர் அருந்தவபாலனை தமிழ் மக்கள் பேரவைக்குள் கொண்டு வரும் முயற்சிகளும் நடந்திருந்தன.

ஏனெனில் தமிழ் மக்கள் பேரவையில் நிழலில் உட்கார்ந்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மற்றைய இடங்களை விடவும், தென்மராட்சியில் வாக்கு வங்கி மிகக் குறைவு. ஆனால் தமிழரசுக் கட்சி மீது அதிருப்தியில் உள்ள அருந்தவபாலனை பேரவைக்குள் உள்வாங்கி, பின்னர் படிப்படியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தராக மாற்றுவதன் மூலம் தென்மராட்சியில் மிகப்பலமான நிலையை அடையலாம் என அவர்கள் எண்ணினர். ஆனால் அருந்தவபாலன் பிடிகொடுக்கவில்லை. ஆனாலும் இப்படிப் பிற கட்சிகள் தனக்கு வலைவீசுவதை, கட்சித் தலைமையின் காதில் போட்டு வைத்தார். கிட்டத்தட்ட அதுவொரு மறைமுக மிரட்டல். “எனக்கு உரிய இடத்தைக் கட்சி வழங்கா விட்டால், அந்தக் கட்சிகளுக்குப் போக வேண்டியிருக்கும்” என்பதே அவர் சொல்லாமல் சொன்ன செய்தி. அந்தச் சந்தர்ப்பத்தில் தான், மாகாண சபை உறுப்பினர் சயந்தன் ‘ஒப்பினாக் கதைச்சு’ ஊடகங்களில் தன் மதிப்பை இழந்திருந்தார். இப்படிப்பட்ட நிலையில், அருந்தவபாலனும் அதிருப்தியோடு கட்சி தாவிவிட்டால், தென்மராட்சியில் இருந்த பிடி நழுவிவிடும் என்று தமிழரசுக் கட்சி கணக்குப் போட்டது.

தேசியப்பட்டியல் எம்.பி என்ற தூண்டிலை அருந்தவபாலனை நோக்கி, தமிழரசுக்கட்சி எறிந்தது. ஏற்கனவே இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமல் போன எம்.பி பதவி, தானாக மடியில் வந்து விழுவதை யார்தான் விரும்பமாட்டார்கள். அதனால் மீண்டும் தமிழரசுக் கட்சியின் கோட்டையாக தென்மராட்சியை மாற்றும் முனைப்பில் அருந்தவபாலன் இறங்கினார்.

உள்ளூராட்சித் தேர்தலில் தனக்கு நம்பிக்கையான, மக்கள் சேவையில் அர்ப்பணிப்புக் கொண்டவர்களைக் களமிறக்குவதன் மூலம் தன் பிடியை தென்மராட்சியில் இன்னும் பலமாக்க நினைத்தார். அதற்கு மேலிடமும் பச்சைக் கொடி காட்டியிருந்தது. அதனை நம்பியே, இதுநாள்வரை தனது மறைமுக எதிரிகளில் ஒருவராகக் கருதிய சயந்தனுடன் இணைந்து, சாவகச்சேரி நகரசபைக்கான கட்டுப்பணத்தைக் கட்ட அருந்தவபாலன் சென்றிருந்தார். ஆனால் கடைசி நேரத்தில், அருந்தவபாலன் சமர்ப்பித்த பட்டியல் தூக்கியெறியப்பட்டு, சயந்தனின் பட்டியலே ஏற்றுக்கொள்ள திரைமறைவில் காரியங்கள் நடைபெற்றதாலேயே இவ்வளவு அமளிதுமளி இடம்பெற்றிருந்தது. எனினும் கட்சி மீது பகிரங்கமாக–ஊடகங்கள் வாயிலாக–எதுவும் சொல்லாமல் இன்னும் மௌனம் காக்கிறார் அருந்தவபாலன். சிலவேளைகளில் தப்பித் தவறி வாய் திறந்தல், தேசியப் பட்டியல் கனவு கலைந்து விடலாம் என்ற பயமும் ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது இந்த மௌனமே அவரின் சாணக்கியமாகவும் இருக்கலாம்.

எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் சாவகச்சேரி நகரசபைக்கான கூட்டமைப்பின் வேட்பு மனுத் தாக்கலின் போதான உள்ளக முரண்பாடு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமே. இதைப் போலவே –நீறு பூத்த நெருப்பாகப் – புகைந்து கொண்டிருக்கும் உட்கட்சிப் பொட்டுக் கேடுகள், இனிவரும் வேட்புமனுத் தாக்கல்களின் போதும் வெடிக்கவே அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, யாழ்.மாநகர சபை வேட்பு மனுத் தாக்கலுக்கு முன்னர் வெட்டுக் கொத்துகள் நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மக்களுக்கு பொழுது போக்குகள் காத்திருக்கின்றன.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”

# அளவெட்டிப் பெண் அடித்துக் கொலை

## கனடாவில் கோரம்



கனடா,டிசெ.16

கனடாவில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் பெண்ணொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை படுகொலை செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்கார்பரே பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஜெயந்தி சீவரத்னம் என்ற தமிழ் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டதாகவும் மால்வேர்ன் பகுதியில் உடலில் கடுமையான காயங்களுடன் குறித்த பெண்ணின் உடல் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ரொறொண்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

பாதசாரிகள் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போதிலும் அவர் உயிரிழந்து விட்டதாகவும், அவரது உடலிலேற்பட்ட படுகாயங்கள் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளதாகவும் மரண விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் கணவர் கதிர்காமநாதன் சுப்பையா கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)



# மலேசியப் பிரதமர் இலங்கை வருகிறார்

கொழும்பு,டிசெ.16

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று மலேசியப் பிரதமர் தமது பாரியாருடன் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் தம்பதி இலங்கையில் நாட்களை கழிக்கும் காலப்பகுதியில் மலேசியப் பிரதமருக்கான உபசரிப்பு அமைச்சராக கயந்த கருணாதிலக கடமையாற்றவுள்ளார். ஜனாதிபதியும் பிரதமரும் இந்த நியமனத்தை வழங்கியுள்ளனர்.

மலேசியப் பிரதமரும் அவரது பாரியாரும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள். (அ)

# ரெலோ உறுப்பினருக்கு பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு,டிசெ.16

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரெலோவின் உறுப்பினரைப் பிணையில் செல்ல அநுராதபுரம் மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அனுமதி வழங்கியது.

கடந்த எட்டு ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த அந்தோனிப்பிள்ளை மரியசீலன் என்ற நபருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி குணவர்த்தனவினால் பிணை வழங்கப்பட்டது. கடந்த 2009ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இலங்கை அரசாங்கத்துக்கெதிராகக் கருத்துத் தெரிவித்தமைக்கு உடந்தையாக அந்தோனிப்பிள்ளை மரியசீலன் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.



இந்த வழக்கின் ஆரம்பத்திலேயே செல்வம் அடைக்கலநாதன் பிணையில் செல்ல சட்டமா அதிபர் அனுமதித்திருந்த நிலையில், மரியசீலனை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அத்துடன், குறித்த வழக்கானது ஆரம்பத்தில் வவுனியாவிலும் பின்னர் சட்டமா அதிபரால் அநுராதபுரத்துக்கும் மாற்றப்பட்டது.

மேலும் குறித்த நபரைத் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணை மற்றும் 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் செல்ல அனுமதியளித்து நீதிபதி உத்தரவிட்டார். (அ)

# கட்சி தாவியவருக்கு அமைச்சுப் பதவி



கொழும்பு,டிசெ.16

திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீயானி விஜேவிக்ரம, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் தினேஷ் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியின் உறுப்பினரான ஸ்ரீயானி, கடந்த வாரம் ஜனாதிபதிக்குத் தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சாராய இளைஞர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.16

சாராயப் போத்தல்களைப் பேரூந்தில் நூதன முறையில் கொண்டு சென்ற இளைஞன் ஒருவரைப் பொலிஸார் மடக்கினர்.

காங்கேசன்துறைப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியேட்சகர் டீ.கே பியந்த தலைமையிலான பொலிஸ் குழுவினரே, கொடிகாமம் அரசடி வீதியில் வைத்து குறித்த சந்தேக நபரை நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

20 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞன் வைத்திருந்த 75 போத்தல்களிலும் தலா 175 மி.லீ கொள்ளவில் சாராயம் காணப்பட்டது.

காங்கேசன் துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-11)

## இன்று நாளும் கோளும்

16.12.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 01 ஆம் நாள்

திரயோதசி மு.ப. 08.46 மணி வரை அனுஷம் மு.ப. 5.30 மணி வரை

இராகுகாலம் 09.00 - 10.30 சுபநேரம் பி.ப. 12.15 - 01.15 எமகண்டம் பி.ப. 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேன்மை | இரக்கம் | நன்மை | வீண்செலவு | யோகம் | வரவு | நலம் | பிரயாணம் | சிந்தனை | கவனம் | பெருமை | சாந்தம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் பாதுகாப்பையும் இலங்கை கவனிக்க வேண்டும்

கொழும்பு,டிசெ.16

அம்பாந்தோட்டை துறைமுக விவகாரத்தில் இந்தியாவின் பாதுகாப்பையும் இலங்கை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமாரிடம், அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீன நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருப்பது தொடர்பாக ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கையுடனான எங்கள் உறவுகளின் வலிமை மற்றும் உறுதியான தன்மை குறித்து நாங்கள் உண்மையில் நம்பிக்கை கொண்டுள்ளோம். அது ஆழமாக வேரூன்றிய, பல பரிமாணங்களைக் கொண்டது. எமது உறவுகள் எந்தவொரு மூன்றாவது நாட்டிலும் தங்கியிருக்கவில்லை.

பிராந்தியத்தின் பாதுகாப்பு கரிசனையுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து நாம் இலங்கையுடன்இணைந்து செயற்பட்டு வருகின்றோம். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமை குறித்து எமக்குப் பிரச்சினையில்லை. ஆனால் அதனால் இந்தியாவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இலங்கை பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)



## அவையிட்டை அனுமதி கேட்டுக் கடிதம் குடுக்க வேணுமாம்

மழை விட்ட உடனை நுளம்புக் கடியும் துவங்கிவிட்டுது. அதாலை ராத்திரி முழுக்க ஒரு கண்ணுக்கு நித்திரை இல்லை. இருந்தாலும் ஐஞ்சு மணிக்கு அடிக்கிற கோயில் மணி எப்பிடியாவது எழுப்பிப் போடுது. அவனவன் பலவருஷமா அடிச்ச தண்ணியை விட்டிடுறான். குடிச்ச சிகரட்டை விட்டிடுறான். இந்தப் பேப்பர் பாக்கிற பழக்கத்தை என்னாலை விடேலாமைக் கிடக்கு.

இதை நான் சொல்ல முதலி என்னைத் தாறுமாறாத் திட்டுறான். அண்ணை தண்ணியாலை ஆக்கள் சாவினம். சிகரட்டாலை ஆக்கள் சாவினம். பேப்பராலை ஆக்களுக்கு மூளை வளருமேயொழிய குறையாது – எண்டு வியாக்கியானம் சொல்லுறான்.

"அண்ணை பேப்பர் பாக்கிறதாலை எத்தினை தெரியாத அலுவலெல்லாம் தெரிய வருகிது. இண்டைக்கும் ஒரு செய்தி அண்ணை. சட்டம் கிட்டம் எண்டு சொல்லி எல்லாத்துக்கும் புதுச் சட்டத்தைக் கொண்டு வந்தவங்கள் இப்ப மடிக்கையும் கையை வைச்சிட்டாங்களெல்லே! – என்டான் முதலி

என்ன? எலக்சனிலை ஏதேன் மாற்றமேயெடா? மனத்தைப் பதறவிடாமல், அறுவானே விளக்கமாச் சொல்லடா!" எண்டன். முதலீன்ரை கதையைக் கேக்க எனக்குப் பதை பதைப்பாப் போச்சுது.

"அண்ணை, ஒண்டுக்கும் பதறாதை. இந்தா கான் போனிலையும் அது கிடக்குப்பார்" எண்டு போனை நீட்டினான். பாத்த உடனை ஒரு பக்கம் சிரிப்பும், உதை வைச்சு நடக்கப் போற விளையாட்டுகளை நினைச்சு மற்றப் பக்கம் கவலையுமாக் கிடந்திது. எண்டாலும் எங்கடை சனம் நினைக்கிற மாதிரி உடனை "நான் தப்பிவிட்டன்" எண்டு தான் மனம் நினைச்சிது. உந்தச் சட்டம் நான் இளசா இருக்கேக்கை வந்திருந்தால் எத்தினை தரம் கோடெண்டும், கேசெண்டும் அலைஞ்சு திருஞ்சிருப்பன். கோயில்குளம், விரதம் எண்டு மனசி மாட்டெண்டாலும், நான் விடன். ஒரு மாதிரிச் சமாளிச்சுப் போடுவன்.

என்னைக் குலுக்கின அந்தச் செய்தி என்ன தெரியுமே? வாசிக்கிறன் கேளுங்கோ. "மனைவியின் விருப்பமின்றிப் பாலுறவு கொள்வதும் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை விதிக்கப் படக் கூடிய குற்றச் செயல் என்ற அடிப்படையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன. பாலியல் வன் கொடுமைக்கு உள்ளாகும் மனைவி கணவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படும். குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, அடுத்த ஆண்டு நடுப்பகுதி அளவில் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்" எண்டு தெட்டத் தெளிவா எழுதிக் கிடக்கு.

இப்ப வந்திருக்கிற சட்டத்தைப் பாத்தால் இனி எங்கடை ஆக்கள் முதல் அவையிட்டை அனுமதி கேட்டு ஒரு கடிதம் முதல் நாள் காலமையே குடுத்திட வேணும். சில நேரம் அவை "பாப்பம்" எண்டு சொன்னால் துலைஞ்சிது. இல்லாட்டி அதை வாங்க வேணும், இதை வாங்க வேணும் எண்டு ஒரு நீளமான பட்டியலைக் குடுத்தால்... அதுவும் கழுத்திலை கயிறாப்போம். உப்பிடி ஒவ்வொரு நாளும் பட்டியலை நீட்டினாளவையெண்டால் எல்லாம் வில்லங்கமாத்தான் போகும். சட்டம் கடுமையா வந்தால் சில சமயம் வில்லங்கப்படாமை உவையைக் கையைக் கழுவி விட்டிட்டு வேறைவேலை பாக்க வேண்டிவரும் எண்டும் சில ஆக்கள் நினைப்பினம்.

இப்ப உந்தச் சட்டத்துக்கு என்ன அவசியம் எண்டு முதலி கேக்கிறான். உதைப் பற்றிக் கதைச்சால் அவன் கொம்பேறி மூக்கனா என்னிலை பாயிறான். உது சந்தோஷமா குடித்தனம் நடத்திறவையிளை இடைஞ்சல் படுத்திறமாதிரி எல்லே. ஒரு ஸ்கூட்டியை எடுத்துக் குடுத்தே நாங்கள் படுகிற பாடு. ஏறி முறுக்கினாளவை எண்டால் நாங்கள் தானே பயந்து விலகிறம். ஆம்பிளையள் மட்டும் அவதானத்தோடை மோட்டச் சைக்கிள் ஓடாட்டீ சந்திக்குச்சந்தி உவளவை தாங்களும் அடிபடுகிறது மாத்திரமில்லை, மற்றவையளையும் சாக்காட்டிப் போட்டெல்லே போவிடுவளவை. இப்ப உப்பிடிச் சட்டத்தையும் பாஸ்பண்ணிப் போட்டாங்களேண்டால் இனி அவ்வளவுதான். இப்ப சாப்பாட்டை நேரவழிக்கு வாங்கித் தின்னுறதே பெரிய பாடாக்கிடக் கேக்கை, உதுக்கும் தவங்கிடக்க வேணுமெண்டது எங்கடை தலைவிதி எண்டுதான் நினைக்கிறன்" – எண்டு முதலி சொல்லுறதைப் பாத்தால் தலை இடிக்கிது.

என்னண்டாலும் எங்கடை அறிவுக்கேற்ற மாதிரி சட்டங்களைத் திருத்த வேணும். சனம் மானசீகமாகப் பதப்படாமல் உப்பிடி அப்பிடி எல்லாம் சட்டங் கொண்டந்தால், படிக்காத சனம் சட்டத்தை சரியா விளங்காமல் கோடு கச்சேரி எண்டு திரிஞ்சு தாங்களும் கெட்டு, குடும்பத்தையும் கெடுக்கப் போகினம். உது குடியைக் கெடுத்துக் குடும்பங்களையும் கெடுக்கிற விளையாட்டு. அது அடிக்கடி தேவைப்படுகிறவை, சட்டம் வரமுன்னமே ஆக்களை ஒருமாதிரிக் குழையடிச்சு வைச்சிருக்கப் பாருங்கோ!

- வில்லங்கம் விநாசி

## ஔவை பாரதி விழாவில் யாழ்ப்பாணப் பேச்சாளர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.16

மதுரைக் கம்பன் கழகம் எட்டாவது ஆண்டாக முன்னெடுக்கும் ஔவை பாரதி விழா மதுரை ஆண்டாள்புரம் ஸ்ரீமீனாட்சி நிலையத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணப் பேச்சாளர்கள் இருவர் பங்குபற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளருமாகிய ச.லலீசன் ஆகியோர் மதுரை கம்பன் கழகத் தலைவர் பேராசிரியர் சொலமன் பாப்பையா மற்றும் இணைப்பாளர் பட்டிமன்றம் ராஜா ஆகியோருடைய அழைப்பை ஏற்றுத் தமிழகம் சென்று விழாவைச் சிறப்பிப்பதோடு கருத்தரங்கம் மற்றும் தொடர்ந்து இடம்பெறும் பட்டிமன்ற பங்களிலும் பங்கேற்கவுள்ளனர். (அ)

## சிக்கினார் நகைக் கள்ளன்

யாழ்ப்பாணம்,டிசெ.16

முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் நகைக் கடையொன்றில் நகை திருடிய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

முள்ளியவளை தண்ணீரூற்று நெடுங்கேணிச் சந்திப் பகுதியிலமைந்துள்ள நகைக்கடையொன்றில் கடந்த 12.12.2017 அன்று நான்கு பவுண் நகைகள் வைக்கப்பட்ட சிறிய பெட்டி ஒன்றினை நூதன முறையில் ஒருவர் திருடிச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் கடையின் உரிமையாளர்முள்ளியவளை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து, வங்கியொன்றின் சி.சி.ரி கமெராவில் பதிவான காட்சிகளை வைத்துப் புதுகுடா பகுதியில் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை 13.12.2017 அன்று கைது செய்யப்பட்டார்.

இவரைக் கைது செய்ய முற்பட்ட போது இவர் தனது உடலை வெட்டிக் கொண்டதனால் காயமடைந்த குறித்த இளைஞன் மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

# சீனக்குழுவோடு ரணில் சந்திப்பு



கொழும்பு,டிசெ.16

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் மட்டக் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு, பேச்சுக்களை நடத்தியுள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின், அனைத்துலக உறவுகளுக்கான திணைக்களத்தின் உதவி அமைச்சர் வான் யாஜூன் தலைமையிலான உயர் மட்டக் குழுவே இலங்கை வந்துள்ளது.

இந்தக் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, அலரி மாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். (அ)

# ஜனாதிபதி அஞ்சலி



கொழும்பு,டிசெ.16

வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளராக கடமையாற்றி, அண்மையில் உயிரிழந்த கருணாதிலக அமுனுகமவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று முன்தினம் இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த கொழும்பில் அமைந்துள்ள தனியார் மலர்சாலைக்கு விஜயம் செய்து இறுதி அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி, அவருடைய குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார். (அ)

# சர்வதேச மொடலிங்: இலங்கையர் முதலிடம்

கொழும்பு,டிசெ.16

சர்வதேச ரீதியாக இடம்பெற்ற மொடல் போட்டியில் இலங்கையர் ஒருவர் முதன்முறையாக முதலிடம் பெற்றுள்ளார்.

பிரான்ஸில் நடைபெற்ற 2017 ஆம் ஆண்டுக்கான சிறந்த மொடல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றுள்ளது. இந்தப் போட்டியில் 176 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்களுள்



இலங்கை கல்லேவெலவைச் சேர்ந்த ஜனுக ராஜபக்ஷ முதலிடம் பிடித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் சர்வதேச ரீதியான மொடல் போட்டியொன்றில் இலங்கை முதலிடம் பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இதிலே பெல்ஜியம், கனடா, இத்தாலி, அமெரிக்க உட்பட 174 நாடுகளைச் சேர்ந்த மொடல்கள் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேட்புமனுக்கள் நிராகரிப்பு காரணங்கள் இவைதான்!

## பவ்ரல் அமைப்பு விளக்கம்

கொழும்பு,டிசெ.16

ஆறு காரணங்களாலேயே கட்சிகள் சமர்ப்பித்த, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் நிலை ஏற்படுவதாக பவ்ரல் அமைப்பின் பேச்சாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக பிரதான அரசியல் கட்சிகளால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் பல நிராகரிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

93 உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்புமனுத் தாக்கல் நேற்று முன்தினம் முடிவடைந்தது.

இதையடுத்து வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்பட்ட போது, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆறு வேட்பு மனுக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலா இரண்டு வேட்பு மனுக்களும், அக்கரைப்பற்று மாநகரசபைக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தாக்கல் செய்திருந்த வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டன.

வேறு பல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்திருந்த வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

இந்த நிலையில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் சூழல் குறித்து பவ்ரல் அமைப்பின் பேச்சாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தகவல் வெளியிடுகை



யில்,

"புதிய சட்டத்தின்படி, அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு ஆறு காரணங்கள் உள்ளன.

1.அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பொதுச்செயலர் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவரின் கையொப்பம் இல்லாமை.

2.சமாதான நீதிவானின் உறுதிப்படுத்தல் கையொப்பம் இல்லாமை.

3.பொதுச்செயலரால் அல்லது சுயேச்சைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட முகவரால் வேட்பு மனு கையளிக்கப்படாமை.

4.தேவையான பெண் வேட்பாளர்களை உள்ளடக்காமை.

5.போதிய வேட்பாளர்களை கொண்டிருக்காமை.

6.கட்டுப்பணம் செலுத்தாமை.

ஆகிய காரணங்களுக்காகவே வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும் நிலை ஏற்படுவதாக தெரிவித்துள்ளார். (அ)

# அந்தநாள் ஞாபகம்



**16.12.1925**

இலங்கை வானொலியின் ஒலிபரப்பு சேவை கொழும்பில் ஆரம்பமானது.

# இலங்கைத் தேயிலைக்கு ரஷ்யாவில் திடீர்த் தடை



கொழும்பு,டிசெ.16

இலங்கையில் இருந்து தேயிலை உள்ளிட்ட அனைத்து விவசாய உற்பத்திப் பொருட்களையும்இறக்குமதி செய்வதற்கு ரஷ்யா தற்காலிகத் தடைவிதித்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் இந்த தற்காலிகக் கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கும் என்று ரஷ்யாவின் விவசாயப் பாதுகாப்புக் கண்காணிப்பு அமைப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேயிலைத் தொகுதி ஒன்றில் கஹப்ரா வண்டு எனப்படும், பூச்சி கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, இத்தகைய தடையை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக, ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதனிடையே, ரஷ்யா தேயிலை உற்பத்தியாளர் சங்கமான ரஷ்யாகொபியின் உறுப்பினர்கள் இலங்கையில் இருந்து கடுமையான கட்டுப்பாடுகளுடன் தேயிலை இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரியுள்ளனர்.

2017ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களிலும் ரஷ்யா 436 மில்லியன் டொலர் பெறுமதியான 141,300 தொன் தேயிலையை இறக்குமதி செய்திருந்தது.

ரஷ்யாவின் தேயிலைச் சந்தையில் 23 வீதத்தை இலங்கைத் தேயிலையே ஈடுசெய்து வரும் நிலையில், இந்தத் தடை இலங்கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவைப் பிடிக்க நீடிக்கிறது தடை


கொழும்பு,டிசெ.16

பொதுவுடைமைகள் சட்டத்தின் கீழ் தனக்கு எதிராக பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கக் கோரி முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ச தாக்கல் செய்த மனு மீதான இடைக்காலத் தடையுத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றால் இந்த இடைக்காலத் தடை உத்தரவு அடுத்த வருடம் ஜனவரி 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலராக பதவியில் இருந்த போது கோத்தாபய தமது பெற்றோருக்கு 90 மில்லியன் ரூபா செலவில் நினைவிடம் அமைப்பதற்கு அரச நிதியைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் நடத்தப்படும் விசாரணைகளின் ஒரு கட்டமாகவே கோத்தாபய ராஜபக்சவைக் கைது செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கோத்தாபய மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவரைக் கைது



செய்வதனைத் தடுக்கவே இந்தத் தடையுத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டு, தற்போது நீடிக்கப்பட்டுள்ளது. (அ)




## தமிழர் விடுதலைக் கூட்டணி கட்டுப்பணம் செலுத்தியது

கிளிநொச்சி,டிசெ.16

தமிழர் விடுதலைக் கூட்டணி மூன்று பிரதேச சபைகளுக்குமான கட்டுப்பணத்தினை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை செலுத்தியது.

ஆனந்தசங்கரி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பிலும், வெற்றி பெறுவது தொடர்பிலும் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். (அ)

## தொடர்ச்சிகள்

**பிரபாகரனால்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன” என வளாகத்தின் முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

“கடந்த நவம்பர் மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்தநாளை யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்துக்குள் கொண்டாடிய தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா வளாகம் காலவரையரையின்றி மூடப்பட்டிருந்ததுடன் விடுதிகளில் இருந்த மாணவர்களும் உடனயாக வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இந் நிலையிலேயே, வவுனியா வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் கடந்த 13 ஆம் திகதியில் இருந்து மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை விடுதிகளில் தங்குவதற்கு தகுதிபெற்றவர்கள் கடந்த 13 அம் திகதியில் இருந்து தங்குவதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் வியாபாரக் கற்கைகள் பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் யாவும் அடுத்த வருடம் ஜனவரி 2 ஆம் திகதயில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன” என்றும் வளாக முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார்.(அ)

**குற்றவாளிகளே...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலி உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்தனர். அவர்கள் அனைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டிருந்தனர். தற்போது சிறையில் 100 பேர் வரையில் உள்ளார்கள். அவர்கள் அரசியல் கைதிகள் அல்ல.

கடந்த 85, 86, 87 ஆம் ஆண்டும் இது போன்ற ஒரு குழுவினர் இருந்தார்கள். அவர்களில் சிறு குற்றங்களை புரிந்தவர்களுக்கு பிணையும், குற்றங்களை ஒப்புக்கொண்டவர்களுக்கு சிறு தண்டனையும் வழங்கப்பட்டிருந்தது. இந்த முறையும் அப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அது அடுத்த வருட ஆரம்பத்தில் முன்னெடுக்கப்படும்.

நீதியமைச்சின் தகவலின் படி தற்போது அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை. இருப்பவர்கள் அனைவரும் குற்றவாளிகளே” என்று தெரிவித்துள்ளார். (அ)

**வீட்டுக்குள்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

“ எமது குடும்பப் பிரச்சினையைத் தீர்த்து விட்டோம், கூட்டமைப்பு மன்னாரில் மட்டுமல்ல வடக்கு மற்றும் கிழக்கிலும் வெற்றி பெறும். மன்னார் நகரசபை, மன்னார் பிரதேசசபை, மாந்தை மேற்கு பிரதேசசபை, நானாட்டான் பிரதேசசபை, முசலி பிரதேசசபை ஆகிய 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது” எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட முகவராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில், இலங்கை தமிழரசுக்கட்சி நேற்று மாலை மன்னார் தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியது. (அ)

**16 உள்ளூராட்சி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுவைக் கையளிப்பதற்கான காலம் நேற்றுடன் நிறைவடைந்தநிலையில் மாவட்டத்திலுள்ள ஏனைய 16 உள்ளூராட்சி சபைகளுக்கான கட்டுப்பணமே தமிழ் அரசுக் கட்சியால் நேற்றுச் செலுத்தப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் கட்டுப்பணத்தை செலுத்தி வேட்பாளர்களுக்கான விண்ணப்ப படிவத்தை பெற்றனர்.

இதேவேளை, இரண்டாவது கட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள 248 உள்ளூராட்சி சபைகளுக்குமான வேட்பு மனுக்கள், எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வரும் 21ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

எனினும், எல்லா உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே நாளிலேயே தேர்தல்கள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

**தொடங்கியது...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவகரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் சார்பில் மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்காக நேற்றுக் காலை மன்னார் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே வி.எஸ்.சிவகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“ஜனநாயக ரீதியான அடிப்படைக் கோட்பாட்டையும், தமிழ்த் தேசிய விடுதலையின் நோக்கையும், வடக்கு கிழக்கு இணைந்த தாயக கோட்பாட்டினுடைய அடிப்படைக் கட்டமைப்பையும் நிறைவேற்றும் புதிய நோக்கோடு தர்ம யுத்தம் ஒன்றுக்கான மாற்றுக்களத்தை திறந்து விட்டிருக்கின்றோம்.எங்களோடு இணைந்து பயணிக்க வருமாறு எல்லோரையும் அழைக்கின்றோம்.

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற நோக்கோடு , தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தலைமை தாங்குவதாகக் கூறுபவர்கள் தமிழ் மக்களைத் தவறாக வழி நடத்துகின்றனர். அத்துடன் கொழும்பிலே தமிழ் மக்களை அடகு வைத்துள்ளனர். இந்தக் காரணத்தினாலேயே நாங்கள் இந்த தர்ம யுத்தத்தினைத் தொடங்கியுள்ளோம்.எமது தர்ம யுத்தம் வெற்றி பெறும். ‘அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்’ என்பது போல் பிழைத்துப்போன அரசியலை, தர்ம யுத்தத்தில் தோற்கடிப்போம்” எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் போது ஈ.பி.ஆர்.எல்.எப்.அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், மன்னார் நகர சபையின் முன்னாள் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் மெரினஸ் பேரேரா உட்பட பலர் உடனிருந்தனர். (அ)

**வீதியில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாரடைப்பு ஏற்படுள்ளது. இதனையடுத்துக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. மாரடைப்பால் சாரதி வாகனத்தின் இருக்கையில் அமர்ந்தவாறு உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த புளியங்குளம் பொலிஸார், உயிரிழந்த சாரதியின் சடலத்தை வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (அ)

**டிசெம்பர் 28இல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு, கேப்பாபிலவு மக்கள் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த போராட்டம் இன்றுடன் 290 நாட்களைக் கடந்துள்ளது.

இந்நிலையில் தமது போராட்டக் களத்திற்கு கொண்டு விரைவில் தீர்வை வழங்குமாறு மக்கள் கோரியிருந்தனர்.

இந்நிலையில் கேப்பாபிலவு மக்களுக்குச் சொந்தமான 132 ஏக்கர் பரப்பளவான காணிகளை டிசெம்பர் 28 ஆம் திகதி, காணிகளின் சொந்தக்காரர்களுக்கு கையளிக்கவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளதால், போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர். (அ)


**அந்தியேட்டி நிகழ்வும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

**வைரவி நாகலிங்கம்**
**(பிரபல புடவை வியாபாரி)**

கடந்த 16.11.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வைரவி நாகலிங்கம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.12.2017) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது தந்தையின் மரணச் சடங்கில் கலந்து, எமது துயரில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் தெரிவித்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் அஞ்சலித்தோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த புலம்பெயர் உறவுகளுக்கும் எமது நன்றிகளை நவில்கிறோம்.

**மாதா கோவிலடி, சங்கமம் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**
**தொலைபேசி:** 0772178699, 0775827903

**தகவல்: குடும்பத்தினர்**

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

**கட்டணம் இன்றி பிரசுரிக்க**

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

**எதிரொலி** Ethiroli

**021 3004848**

நிபந்தனை களுக்குட்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38 ஒரேநாளில் பேருக்குத் தூக்கு


ஈராக்,டிசெ.16

ஈராக் நாட்டில் தீவிரவாதக் குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட 38 பேருக்கு ஒரே நாளில் நேற்று வெள்ளிக்கிழமை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஈராக் நாட்டில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்ட 38 பேர் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டு, அவர்கள் தெற்கு ஈராக்கின் நசிரியா நகரிலுள்ள சிறைச்சாலையொன்றில் அடைக்கப்பட்டனர்.

பின்னர் இவர்கள் அனைவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்குமாறு எடுக்கப்பட்ட முடிவையடுத்து அவர்களுக்கான தூக்குத் தண்டனை நேற்று நிறைவேற்றப்பட்டது. முன்னதாகக் கடந்த செப்ரெம்பர் 25 ஆம் திகதி ஒரே நாளில் 42 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் அதிக எண்ணிக்கையிலான நபர்களுக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ)





## ரசிகர்களை மீண்டும் சந்திக்கிறார் ரஜினி

சென்னை,டிசெ.16

திரையுலகப் பிரபலம் நடிகர் ரஜினிகாந்த் ரசிகர்களை மீண்டும் டிசெம்பர் 26 முதல் 31 வரை சந்திக்கவுள்ளார்.

சூப்பர்ஸ்ரார் என்றால் சின்னக் குழந்தையையும் சொல்லும் என்பது போலவே நடிகர் ரஜினிகாந்தைத் தெரியாதவர்களென்று யாருமே இருக்க முடியாது. அவரைக் காணத் தவிக்கும் ரசிகருள் எங்கள் பல.

அந்த வகையில் அவர் முதன் முறையாக ரசிகர்களைச் சந்தித்த போது "ஆற்று நீரில் காலை வைக்கும் போது முதலைகளுள்ளது தெரிகிறது. அப்போது போய், முன் வைத்த காலை பின் வைக்க மாட்டேன் என்ற முரட்டுத் தைரியம் கூடவே கூடாது" எனவும், இறுதி நாளன்று பேசும் போது "தமிழ்நாட்டு முறைகள் கெட்டு விட்டது. போர் வரும் போது பார்த்து கொள்ளலாம். ஆண்டவன் இருக்கான்" என்றும் கூறியிருந்தார்.

32 மாவட்டங்களில் 15 மாவட்டங்களைச் சேர்ந்த ரசிகர்களைச் சந்தித்து மீதமுள்ள 17 மாவட்ட ரசிகர்களை அடுத்த மாதமே சந்திப்பதாகத் தெரிவித்தும் சந்திக்காமையாலேயே தற்போது குறித்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் சென்னை பொலிஸ் ஆணையரிடம் அகில இந்திய ரஜினி ரசிகர் மன்றம் சார்பில் நிர்வாகி சுதாகர் அளித்த மனுவில்,

"எதிர்வரும் டிசெம்பர் 26 முதல் 31 வரை கோடம்பாக்கம், விஸ்வநாதபுரம் பிரதான சாலையில் உள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் தினமும் காலை 8 மணியிலிருந்து மதியம் 3 மணி வரை ரசிகர்களுடன் புகைப்படமெடுத்துக் கொள்ளவுள்ளார். இதற்கு அனுமதியும் பாதுகாப்பும் வழங்க வேண்டும்." எனக் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## மூன்றாவது முறை இணையும் கூட்டணி



சென்னை,செ.16

கே.வி.ஆனந்த் இயக்கவுள்ள புதிய படத்தில் சூர்யா நடிக்கவுள்ளார்.

கே.வி.ஆனந்த் - சூர்யா கூட்டணியில் உருவான படங்கள் 'அயன்' மற்றும் 'மாற்றான்'. இந்தக் கூட்டணி திரையுலகில் பெரும் வரவேற்பைப் பெற்ற கூட்டணியாகும்.

மேலும், 'கவண்' படத்தைத் தொடர்ந்து கே.வி. ஆனந்த் தனது அடுத்த படத்துக்கான கதையை எழுதியும், அதற்கான திரைக் கதையை முடிக்கும் வேலையிலும் முனைப்புடன் இறங்கியுள்ளார். எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாகரும் இவரும் இணைந்து திரைக்கதை எழுதும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

படத்தின் முதற் கட்ட வேலைகள் அடுத்த ஆண்டுத் தொடக்கத்திலும், ஜூன் மாதத்துக்குப் பிறகு படத்தின் படப்பிடிப்பையும் தொடங்க முடிவு செய்துள்ளனர். இதன் தயாரிப்பாளர் யார் என்பது விரைவில் தெரிய வரும். இதனிடையே செல்வராகவன் இயக்கத்தில் உருவாகும் படத்தில் ஜனவரியிலிருந்து கவனம் செலுத்தவுள்ளார் சூர்யா. (இ)

## அடுத்த முறையும் போட்டியிடுவேன்



மொஸ்கோ,டிசெ.16

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்வதே தனது இலட்சியம் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மொஸ்கோவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதில் 1,600 க்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் கலந்து கொண்ட குறித்த சந்திப்பில் "அடுத்தாண்டு ரஷ்யாவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது, இந்தத் தேர்தலில் நான் நிற்க முடிவு செய்துள்ளேன். அப்படி இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால், பொருளாதாரத்தை வளப்படுத்தி, புதிய பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கத் திட்டமிட்டுள்ளேன். அதுமட்டுமன்றி பொருளாதாரச் சீர்திருத்தம் கொண்டு வருவதுதான் எனது இலட்சியம், சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளின் மேம்பாட்டுக்கு முன்னுரிமையும் அளிப்பேன். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடுள்ளதா? என்ற வினாவுக்கு நான் அப்போதே பதிலளித்து விட்டேன், இது ஒரு கற்பனை கலந்த கட்டுக் கதை. எந்தக் கட்சியையும் சாராமல், சுதந்திரமான, சுயேச்சை வேட்பாளராகவே நான் போட்டியிடவுள்ளேன்" எனவும் அவர் தெரிவித்தார். (இ)

## பா.ஜ.க வே வெல்லும்

சென்னை,டிசெ.16

குஜராத் மற்றும் இமாச்சலப் பிரதேசச் சட்டப் பேரவைக்கு நடந்த தேர்தல்களில் பா.ஜ.க ஆட்சியைப் பிடிக்கும் எனத் தேர்தலுக்குப் பிந்திய கருத்துக் கணிப்புகள் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தன.

குஜராத் மாநிலச் சட்டப் பேரவைக்கு மொத்தமுள்ள 182 தொகுதிகளில், முதல் கட்டமாக 89 தொகுதிகளுக்குச் சனிக்கிழமை தேர்தல் நடந்து முடிந்தமையைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக, 93 தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வாக்குப்பதிவு நடைபெற்றது. இதற்கான வாக்கு எண்ணிக்கை டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதே போல இமாச்சல் சட்டப் பேரவைத் தேர்தல் நவம்பர் 9ஆம் திகதி நடைபெற்றது.

BJP

மொத்தமுள்ள 68 தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில் ஆளும் காங்கிரஸுக்கும், பா.ஜ.கவுக்குமிடையே நேரடிப் போட்டி நிலவியது. குஜராத்தில் பா.ஜ.க மீண்டும் ஆட்சியமைக்கும் எனவும், இமாச்சலப் பிரதேசத்தில் காங்கிரஸிடமிருந்த பா.ஜ.க ஆட்சியைக் கைப்பற்றும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (இ)

## தெரேசா மே தோல்வி



லண்டன், டிசெ.16

பிரிட்டன் பாராளுமன்றில் தெரேசா மே கொண்டு வந்த தீர்மானம் தோல்வியடைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கான முயற்சிகளை இங்கிலாந்துப் பிரதமர் தெரேசா மே மேற்கொண்டு வருகிறார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்தவராகவுள்ள தெரேசா மே, சமீபத்திலேயே இதற்கான பிரிவினை உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இதற்காக இங்கிலாந்து 45.55 பில்லியன் யூரோ தருவதற்கு முன் வந்த நிலையில் ஐரோப்பிய யூனியனிலிருந்து முறைப்படி இங்கிலாந்து விலகுவதற்கான பிரேரனை, அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

ஆயினும் இந்தப் பிரேரணை மீது கொண்டு வரப்பட்ட திருத்தத்தில் தெரேசா மே தோல்வியடைந்தார். அவரின் விருப்பத்துக்கு மாறாகவும், திருத்தத்துக்கு ஆதரவாகவும் 309 வாக்குகளும் எதிராக 305 வாக்குகளும் கிடைத்தன. சொந்தக் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியிலேயே அவருக்கு எதிரான நிலைப்பாட்டை சில எம்.பி.க்கள் எடுத்ததே அவருடைய தோல்விக்கு காரணமாயிற்று. (இ)

## கிறிஸ்மஸ் மர வாழ்த்து விமானத்தின் சாகசம்

பெர்லின்,டிசெ.16

ஜேர்மனில் எயார்பஸ் ஏ380 என்ற விமானம் கிறிஸ்மஸ் மரத்தின் வடிவில் வானில் பறந்து அந்த நாட்டு மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தது.

'ஏர்பஸ் ஏ380' என்ற விமானம் உலகின் மிகப் பெரிய பயணிகள் விமானமாகும். இதன் சோதனைப் பயணத்தின் போது ஜேர்மனியின் வான் பரப்பில் பறந்து பயணத்தைத் தொடங்கிய இடத்திலேயே முடித்தது.

இந்த நிலையில், விமானம் பயணித்த காட்சிகள் கிறிஸ்மஸ் மரம் போன்ற தோற்றத்தை வானில் ஏற்படுத்தியது ரேடாரில் பதிவானது. இது குறித்து எயார்பஸ் விமான நிறுவனம், 'இந்தப் பயணத்தின் போது பயணிகள் யாரும் விமானத்தில் பயணிக்கவில்லை. மேலும், இது சோதனையோட்டத்தின் போது நிகழ்த்தப்பட்ட சாகசமாகும்' எனத் தெரிவித்தது. ஹாம்பர்க் விமான நிலையத்திலிருந்து 12.47 மணிக்கு புறப்பட்ட இந்த விமானம், பின் 4.35 மணியளவில் அதே விமான நிலையத்தை வந்தடைந்தது. (இ)

## கார்ப்பந்தயத்தில் மகேஷ் பாபு



சென்னை,டிசெ.16

தெலுங்கு சினிமாவின் கதாநாயகன் மகேஷ் பாபு குளிர்பான விளம்பரமொன்றில் நடிக்கும் காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.

தெலுங்கு சினிமாவின் முன்னணிக் கதாநாயகர்களிலொருவர் மகேஷ் பாபு. இவர் நடிப்பில் கடைசியாக வெளி வந்த ஸ்பைடர் படம் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் அவர் ஒரு பிரபல குளிர்பான விளம்பரத்தில் நடிப்பதற்காகக் கார்ப் பந்தய வீரர் போலத் தோற்றமளிக்கும் புகைப்படங்கள் தற்போது வைரலாகியுள்ளன. இந்த விளம்பரத்தில் பாலிவுட் நடிகர் ரன்வீர் சிங்கும் நடித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆஷஸ் தொடர்: சதத்தை நெருங்கும் ஸ்மித்

பெர்த், டிசெ.16

ஆஷஸ் தொடரின் மூன்றாவது போட்டியில், ஸ்மித்தின் ஆக்ரோஷமான துடுப்பாட்டத்தின் துணையால், அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துக்கு சவால் விடும் வகையில் ஓட்டங்களைச் சேர்த்துள்ளது.

பெர்த் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்தப் போட்டியில் முதல் நாள் ஆட்டமுடிவின் போது இங்கிலாந்து அணி, 4 விக்கெட் இழப்புக்கு 305 ஓட்டங்கள் குவித்திருந்தது. டேவிட் மலன் 110 ஓட்டங்களுடனும், பெயர்ஸ்டோவ் 75 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

2 ஆம் நாள் ஆட்டம் நேற்றுக் காலை தொடங்கியது. இதன் போது பெயர்ஸ்டோவ் சதம் அடித்தார். இங்கிலாந்து 368 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், 140 ஓட்டங்களைக் குவித்த டேவிட் மலன், லயன் பந்தில் ஆட்டமிழந்தார். மலன் ஆட்டமிழந்த சிறிது நேரத்தில் பெயர்ஸ்டோவும் 119 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து வந்த மொயின் அலி ஓட்டமேதும் எடுக்காமல் கம்மின்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். வோக்ஸ் 8 ஓட்டங்களிலும், ஓவர்டன் 2 ஓட்டங்களோடும், பிராட் 12 ஓட்டமெடுத்த நிலையிலும் ஆட்டமிழக்க இங்கிலாந்து 403 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இங்கிலாந்து அணி, கடைசி 6 விக்கெட்டுக்களை 36 ஓட்டங்களுக்குள் இழந்தமை குறிப்பிடத்தக்கது. ஸ்டார்க் 4 விக்கெட்டுகளையும், ஹசில்வுட் 3 விக்கெட்டுகளையும். கம்மின்ஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய, அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான டேவிட் வோர்ணரை 22 ஓட்டங்களுடனும், பான்கிறாப்டை 25 ஓட்டங்களுடன் இங்கிலாந்தின் ஓவர்டன் ஆட்டமிழக்கச் செய்தார்.

ஆனால் அதன் பின்னர் அணித்தலைவர் ஸ்மித்தும், உஸ்மன் கவாஜாவும் அணியைச் சரிவில் இருந்து மீட்டெடுத்தனர். கவாஜா 50 ஓட்டங்களை எடுத்த போது, வோக்ஸின் பந்தில் ஆட்டமிழந்தார். ஆட்டநேர முடிவில் ஸ்மித் 92 ஓட்டங்களுடனும், மார்ஷ் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருக்க, அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (அ)

# அப்ரிடி ஹட்ரிக்: பாக்டூன்ஸ் வெற்றி

ஷார்ஜா, டிசெ.16

ஷார்ஜாவில் அதிரடி நிறைந்த 'ரி-10'கிரிக்கெட் லீக் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. தலா 10 ஓவர்களைக் கொண்ட இந்தப் போட்டிகள் 'ரி-20' போட்டிகளை விடவும் விறுவிறுப்பானவையாக அமைந்துள்ளன. இந்தத் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில், ஷாகித் அப்ரிடி தலைமையிலான பாக்டூன்ஸ் அணியும், சேவாக் தலைமையிலான மரதா அரேபியன்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாக்டூன்ஸ் அணி, 10 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்கள் குவித்தது. பகன் ஸமான் 22 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 45ஓட்டங்களும், டவ்சன் 23 பந்துகளில் 44 ஓட்டங்களும் எடுத்தனர்.

பின்னர் 122 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மரதா அரேபியன்ஸ் அணியின் தொடக்க வீரர்களான கம்ரன் அக்மல், அலெக்ஸ் ஹேல்ஸ் ஆகியோர் களம் இறங்கினார்கள். ஹேல்ஸ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த கம்ரான் அக்மல் 5 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த லென்டில் சிம்மன்ஸ் 4 ரன்னில் பெவிலியன் திரும்பினார்.

ஹேல்ஸ் அதிரடியாக விளையாடியதால் முதல் 4 ஓவரில் 45 ஓட்டங்களை அந்த அணி எடுத்திருந்தது. 5-வது ஓவரை ஷாகித் அப்ரிடி வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தில் ரசொவ் 5 ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த வெயின் பிராவோ, சேவாக் அடுத்தடுத்து எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தனர். இதனால் அப்ரிடி ஹட்ரிக் சாதனை படைத்தார்.

முக்கிய விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்ந்ததால் மரதா அரேபியன்ஸ் அணியால் 10 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் பாக்டூன்ஸ் அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அப்ரிடி ஆட்டநாயகன் விருது பெற்றார். (அ)



# ஆஸி. அணியில் குட்டிக் கங்காரு



சிட்னி, டிசெ.16

19 வயதுக்கு உட்பட்டோருக்கான இளையோர் உலகக் கிண்ணத் தொடரில், அவுஸ்திரேலிய முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவ் வோக்கின் மகனான ஒஸ்டின் வோக் இடம் பிடித்துள்ளார்.

நியூஸிலாந்தில் அடுத்த மாதம் 13 ஆம் திகதி முதல் பெப்ரவரி 3 ஆம் திகதி வரை 19 வயதுக்கு உட்பட்டோருக்கான இளையோர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது.

இதற்கான அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவ் வோக்கின் மகனான ஒஸ்டின் வோக், அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைமை நிர்வாகியாக இருக்கும் ஜேம்ஸ் சதர்லேண்டின் மகன் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

ஆஷஸ் தொடருக்கான பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் சதம் அடித்த இளம் வீரர் சங்கா அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய சம்பியன்ஷிப் தொடரில் ஸ்டீவ் வோக்கின் மகன் ஒஸ்டின் வோக் சதம் அடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பிறீமியர் லீக் உதைபந்தில் முன்னணி அணிகள் ஆதிக்கம்

லண்டன், டிசெ.16

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில், மன்செஸ்டர் சிற்றி, மன்செஸ்டர் யுனைட்டெட், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸ் ஆகிய அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

மன்செஸ்டர் சிற்றி, 4-0 என்ற கோல் கணக்கில் சுவான்சீ சிற்றியை வென்றது. மன்செஸ்டர் சிற்றி சார்பாக, டேவிட் சில்வா 2 கோல்களையும் கெவின் டி ப்ரூனே, சேர்ஜியோ அகுரோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

மன்செஸ்டர் யுனைட்டெட், 1-0 என்ற கோல் கணக்கில் ஏ.எப்.சி போர்ண்மெத்தை வென்றது. மன்செஸ்டர் யுனைட்டெட் சார்பாகப் பெற்ற கோலை றொமேலு லுக்காக்கு பெற்றார்.

டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், 2-0 என்ற கோல் கணக்கில் பிரைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனை வென்றது. டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சார்பாக, சேர்ஜி ஒறியர், சொன் ஹியூங் மின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, லிவர்பூல், வெஸ்ட் ப்ரோம்விச் அணிகளுக்கிடையிலான போட்டியில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிந்தது.

இதேபோன்று, ஆர்சனல், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட் அணிகளுக்கிடையிலான போட்டியிலும் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 16.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.